



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்த்குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வேலூர் மாநகராட்சியின் மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஒரு மாத ஊதியத் தொகையாக மொத்தம் 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் உள்ளனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு திருப்பூர் மாநகராட்சியின் சார்பாக மேயர், துணை மேயர், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், திருப்பூர் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள், திருப்பூர் டையர்ஸ் அசோசியேஷன், திருப்பூர் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தன்னார்வலர் அமைப்புகள் என அனைவரும் அளித்த 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், பொன்பியூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் எம். பொன்னுசாமி, செயல் இயக்குநர்கள் சூர்ய பிரகாஷ், லட்சுமிபதி ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை ராதா பொறியியல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள் வி.ஆர். செந்தில்குமார் மற்றும் திருமதி வி. ராதா செல்வி, இயக்குநர் திருமதி பத்மாவதி ஆகியோர் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 1 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், காக்னிசென்ட் (Cognizant) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜேஷ் நம்பியார் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காக்னிசென்ட் (Cognizant) இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் அரசியல் விவகாரத் துறையின் புருஷோத்தமன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2024) தலைமைச் செயலகத்தில், கும்பகோணம் பரஸ்பர சகாயநிதி நிறுவனத்தின் (KMBF) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். கல்யாணசுந்தரம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பி. வேலப்பன், வழக்கறிஞர் எஸ்.கே. ஸ்ரீதர், வினோத் வேலப்பன் ஆகியோர் உள்ளனர்.

